**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி. எண் : 154/2019**

**அ.சா : 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. முத்து லட்சுமி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | ஆறுமுகம் |
| ஊர் | : | மாதம்பதி |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | கூலி |
| மதம் | : | |
| வயது | : | 45 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 04.05.2023**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மாதம்பதியில் வசித்து கூலி வேலை செய்கிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் வீட்டை பூட்டி விட்டு நானும், எனது மகளும் வங்கிக்கு சென்று விட்டு மீண்டும் வீட்டிற்கு மதியம் சுமார் 12.30 மணியளவில் வந்து பார்த்த போது எனது வீட்டின் கதவு திறந்திருந்தது. பீரோ உடைக்கப்பட்டிருந்தது. பீரோவில் வைக்கப்பட்டிருந்த நகைகள் 3/4 பவுன் தோடுஒரு ஜோடி, செயின்1 1/2 பவுன் எடை , 1/4 பவுன் மோதிரம் ஒன்று, கால் பவுன் பில்லை ஒன்றும், ஞானக்குழல் இரண்டும், கால் கொலுசு ஒரு ஜோடியும், காணாமல் போயிருந்தது. இது குறித்து மத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் என்னிடம் காட்டப்படும் புகார் தான். **புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

காணாமல் போன நகைகளில் கம்மல் ஒரு ஜோடியும், மாட்டல் ஒரு ஜோடியும், செயின் ஒன்றும் கிடைத்துவிட்டதாக போலீசார் தகவல் சொன்னார்கள். காவல் நிலையம் சென்று நகைகளை அடையாளம் காட்டினேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைகள்தான் எனது வீட்டிலிருந்து காணாமல் போய் திரும்ப

கிடைத்த நகைகள் ஆகும். புகைப்படம் (குறுந்தகடுடன்) அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நகைகள் எனது வீட்டிலிருந்து திருடு போன தேதி எனக்கு தெரியாது. எனது வீட்டிலிருந்து 32 ஞானக்குழல், நெற்றி பில்லை ஒன்று கால் பவுன், 3 மோதிரங்கள் தலா 1/4 பவுன் நகைகள் காணாமல் போனதாக புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வீட்டிலிருந்து திருடு போன நகைகள் பழைய நகைகள் என்று சொன்னால் சரிதான். திருடு போன நகைகக்கு பதிலாக அ.சா.ஆ. 2 புகைப்படத்தில் கண்ட நகைகளை கிடைக்கப்பெற்றதாக போலீசார் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரிதான். நான் வீட்டிற்கு வந்த போது கதவு திறந்திருந்தது. போலீஸ் விசாரணையில் அதை சொல்லியுள்ளேன். யார் திருடினார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் அன்றைய தினமே விசாரித்தார்கள். பின்னரும் நகைகளை ஒப்படைத்த பிறகு விசாரணை செய்யவில்லை.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.